**<u>மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி</u>**

**அசல் வழக்கு எண். 215 /2019 வா.சா.1**

2026–ம் ஆண்டு ஜனவரி திங்கள் 19–ம் நாள் திங்கள்கிழமை–ன் வாக்குமூலம் 1857 ம் ஆண்டு சட்டப்பிரிவு 10(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்துவைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்: சிவகாமி | கணவர் பெயர்: சுந்தராஜ் |
| ஊர்: | தாலுகா: |
| வயது: | தொழில்: |
| ஜாதி: | சமயம்: |

---

**<u>19.01.2026:</u>**

**<u>1 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. எனது சொந்த ஊர் மதுரை மாவட்டம் முத்துச்சாமி பட்டி கிராமம் ஆகும். தாவா சொத்து சிவகங்கை மாவட்டம் காயம்பட்டி குரூப் முதலியாம் பட்டி கிராமம் ஆகும். தாவா சொத்திற்கு எங்கள் ஊருக்கும் அரை கி.மீட்டர் தூரம் உள்ளது. தாவா சொத்திற்கு சாலை வழியாக செல்வதாக இருந்தால் முதலியாம்பட்டி கிராமம் வழியாக செல்ல வேண்டும். 1 கி.மீட்டர் தூரம் ஆகும். தாவா சொத்து பிஞ்சை ஆகும். தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு ஞாபகமில்லை. மொத்தம் 1 ஏக்கர் 30 செண்டாகும். தாவா வழக்கு சம்மந்தமாக எனது மகன்கள் ஜீவானந்தம், ஜெயபாரதி ஆகியோர் எனது வழக்கறிஞருக்கு தகவல் சொன்னார்கள். நானும் சொன்னேன். 3 ம் பிரதிவாதி தற்போது மேஜராகிவிட்டார். வயது 24 ஆகும். முத்தையா கோனார் எனது மாமனார் ஆவார்.

2. தாவா சொத்து எனது மாமானாரின் பூர்வீக சொத்தாகும். முத்தையா கோனார் எந்த வருடம் இறந்தார் என்று எனக்கு தெரியாது.எனது திருமணத்திற்கு முன்பே இறந்து விட்டார். முத்தையாகோனாருக்கு 4 ஆண்பிள்ளைகள் மற்றும் 1 பெண் பிள்ளைகள். நான் மூத்தமகன் சுந்தராஜின் மனைவி ஆவேன். தாவா சொத்தை எனது மாமானாருக்கு பின்பு எனது கணவரும், அவரது சகோதரரும் பிரித்து கொள்ளவில்லை. எனது கணவர் இறந்து விட்டார். எனது கணவருடன் பிறந்த செல்வ பெருமாள் உயிருடன் உள்ளார். நாகு என்பவர் எனது திருமணத்திற்கு முன்பே இறந்துவிட்டார். எனது கணவருடன் பிறந்த சகோதரி நாகம்மாள் உயிருடன் உள்ளார். 4,5 பிரதிவாதிகளான நாகம்மாள் மற்றும் செல்வபெருமாள் என்னுடன் பேச்சுவார்த்தையில் இல்லை. தாவா சொத்தில் தற்போது நான் மட்டும் கடலை போட்டு அனுபவம் செய்து வருகிறேன். இன்றைய தேதியில் எனது மாமானார் பெயரில் பட்டா உள்ளது. மேற்படி

பட்டாவை நான் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்திற்கான வில்லங்க போட்டு பார்த்தேன்.

3. தாவா சொத்து 20.06.1949 ல் முதலியாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பழனியாண்டிசேர்வை கிரையம் பெற்ற சொத்து என்றால் எனக்கு தெரியாது. முத்துச்சாமி பட்டியில் உடையப்பக்கோனார் இருந்தாரா என்றால் எனக்கு தெரியாது. உடையப்ப கோனாரிடமிருந்து பழனியப்ப சேர்வை கிரையம் வாங்கினார் என்றால் தெரியாது. தாவா சொத்து ஆதியில் பிரான்மலை கோவில் இனாம் சொத்து என்றால் தெரியாது. நான் 2024 வருடம் வரை இரசீது போட்டுள்ளேன். 04.12.2015 ம் தேதி பட்டா மாறியுள்ள விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்து எனது அனுபவத்திலேயே இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கு SLR, UDR பட்டா எனது மாமானார் பெயரில் கிடையாது என்றால் சரியல்ல. முத்துக்கோனார் எனது மாமானார் கிடையாது என்றால் சரியல்ல. எனக்கும் தாவா சொத்துக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனது உறவினர்களின் தூண்டுதல் பெயரில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும், வழக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதுதல்ல என்றால் சரியல்ல.